**யட்டவத்த பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 16 ஆந் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டவத்த பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியத்தில் நிலவும் 50 நீர் மீட்டர்களின் பெறுமதியான ரூபா. 117,500 நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் சீராக்கப்பட வேண்டும். | இந் நீர்மானிகளை கொள்வனவு செய்யும் போது சம்மந்தப்பட்ட செலவுகள் நீக்கப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட நீர் மானிகளின் தொகையை நாட்குறிப்பு பதிவுகள் முலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீண்டும் செலுத்தப்பட வேண்டிய சேமிப்பக் கணக்கின் மீதி ரூபா. 692,965 இனால் உயர்வாக குறிக்கப்பட்டிருந்தது. | கூடுதலாக காட்டப்பட்டிருந்த பெறுமதி கணக்குகில் சீராக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.2 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டிய மீதி ரூபா. 172,288 ஆகும் | பேற வேண்டிய மீதிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டிய மீதி ரூபா. 325,103 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.3 கணக்ாய்வு தொடர்பான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 63,891,876 பெறுமதியான கணக்குப் பிரிவுகள் 3 இற்க்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதன் காரணமாக கணக்காய்வின்போது அவற்றை திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை. | மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் மற்றும் பிரதி ஆவணங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் தொடர்புடைய அறிக்கைகள் கணக்காயவிற்காக சமர்ப்பிப்பதோடு எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுட னான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) | | | |
| 218 விதி | சபைக்கு சொந்தமான அனைத்துக் காணிகள் | காணிகள் மற்றும் கட்டிடங்கள் வீதிகள் | மதிப்பாயவு நடவடிக்கைகளை இவ் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கட்டிடங்கள் தெருக்கள் தொடர்பான சபையின் ஆரம்பம் தொடக்கம் இதுவரையில் மதிப்பாய்வொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்பான மதிப்பாய்வொன்று செய்யப்பட வேண்டும். | வருடத்தில் பூர்த்தி செய்வதாக தெரிவித்தக்கொள்ளப்படுகிறது. |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா. 239,406 ஆன பொது வைப்புக்கள் தீர்வு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான சேமிப்புகள் தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,675,629 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,166,135 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் குத்துகையும் | 1,087,000 | 1,398,987 | 1,272,854 | 199,501 | 2,010,200 | 1,074,882 | 1,561,829 | 270,228 |
| (ii) வாடகை | 1,221,000 | - | 1,020,275 | - | 2,286,506 | - | 814,226 | 14,500 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் | 915,060 | - | 1,039,458 | - | 395,370 | - | 370,894 | - |
| (iv) ஏனைய வருமானம் | 5,840,300 | - | 3,274,945 | - | 2,820,704 | - | 1,541,696 | 202,714 |
| | **9,063,360** | **1,398,987** | **6,607,532** | **199,501** | **7,512,780** | **1,074,882** | **4,288,645** | **487,442** |

### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி நாளில் காணப்பட்ட நிலுவை வரிப் பணமாக ரூபா. 30,281 மீதியாகியிருந்தது. | அறவிடப்பட வேண்டிய வரி அறவிடப்படவும் எஞ்சியுள்ள வரி தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவும் வேண்டும். | நிலுவை தொகை அறவிடப்பட இது வரையில் மதிப்பாய்வுகள் செய்யப்படடுக் கொண்டிருக்கும் வேலையில் அறவிடப்பட முடியுமான தொகையை அறவிட்டு எஞ்சியுள்ள தொகை வெட்டி நீக்கப்படவுள்ளது. |

### 2.2.3 நீர்க் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 அன்று 05 நீர் வழங்கல் திட்டங்களினால் நிலுவையான மீதி ரூபா. 149,670 அறவிடப்பட்டிருக்கவில்லை. 2019 ஏப்ரில் 30 ஆந் திகதிக்கு இன்னும் ரூபா. 83,315 அறவிடப்படாதிருந்தது. | நிலுவைத்தொகை அறவிடப்பட வேண்டும். | நீர்க் கட்டண நிலுவையினால் இது வரையில் ரூபா. 66,355 ஆன தொகை அறவிடப்படப்ட்டிருப்பதுடன் எஞ்சியுள்ள நிலுவைத்தொகையான ரூபா. 83,315 ஐ அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 அன்று கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக்கட்டணம் ரூபா. 9,376,433 ஆக இருந்ததோடு 2019 ஆம் ஆண்டு ஏப்ரில் 30 ஆம் திகதிக்கு முத்திரைக்கட்டணம் ரூபா. 8,762,439 இன்னும் அறவிடப்படவேண்டியிருந்தது. | நிலுவைத்தொகை அறவிடப்பட வேண்டும். | நிலுவையான ரூபா. 9,376,433 முத்திரைக் கட்டணத்தில் தற்போது ரூபா. 613,994 ஆன தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள தொகையை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

### 2.2.5 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்ட விதிகளுக்கமைய பொறுப்பு கோர வேண்டிய முகவர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்கமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 32,259 மிகை அறவீட்டு தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மிகை அறவீடுகள் செலுத்தப்பட வில்லையெனின் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 கணக்கு இத் தொகையை அறவிடு வதற்கு உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்** | | |
| கணினி அறிவுரையாளர் இல்லாமையினால் சுமார் 2 வருட காலமாக ரூபா. 607,616 பெறுமதியான கணினி உதிரிப்பாகங்களைக்கொண்ட ஈ-நென பியஸ மையம் எந்தவித பாவனையுமின்றி கைவிடபபட்டிருந்தது. அதற்காக வழங்கப்பட்டிருந்த வளங்களில் ஒரு பகுதி சபையின் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டிருந்ததோடு ஏனைய வளங்கல் பயன்படுத்தப்படாதிருந்தது. | அறிவுரையாளர் ஒருவரை வேலையில் இனைத்துக்கொண்டு ஈ-நென பியஸ மையம் இன் செயற்பாடுகள் அவசரமாக செய்யப்பட வேணணண்டும். | ஈ-நென பியஸ மையத்திற்கு அறிவுரையாளர் ஒருவரை வேலையில் இனைத்துக்கொண்டு செலுத்துகை நடவடிக்கைகள் தொடர்பாக இப்பிரிவுக்க பொறுப்பான அமைச்சரிடம் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக அது தொடர்பான செயறடறிட்டத்தின் தகவல்களை தயார் செய்து பிரிவுக்கு பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்** | | |
| மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்கள் வழங்கல் மற்றும் சபை நன்கொடைகளையும் உபயோகித்து கட்டப்பட்ட ரூபா 659,062 பெறுமதியான கட்டிடம் மற்றும் ரூபா. 700,000 கொம்போஸ்ட் முற்றம் கொம்போஸ்ட் உற்பத்திக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உக்கலடையும் கழிவுகளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் கொம்போஸ்ட் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்மந்தப்பட்ட கட்டிடத்தில் கொம்போஸ்ட் தயாரிப்பதற்கு கிராமவாசிகளின் பலத்த எதிர்ப்பு தோன்றியதால் உக்கலடைந்த கழிவுகளை குவித்து வைக்க முடியவில்லை. எனினும் இங்கு உக்கலடையாத கழிவுப் பதார்த்தங்களை தெரிவுசெய்து தயாரிப்பிற்காக பயன்படுத்துவதாக தெரிவித்துக் கொள்கின்றேன் |
| **(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு** | | |
| பிரதேச சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு 2018 ஆம் ஆண்டு 11 வரவு செலவு வேலைத் திட்டங்களுக்காக மானியமாக ரூபா. 156,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை | நிலையான அபிவிருத்தி நோக்கங்கங்களை அடைவதற்கு அவதானம் செலுத்த வேண்டும். | நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்காக மானியம் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அப்போது நிலவி வந்த வேலைப்பலு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டதால் சிறிது கால தாமதம் ஏற்பட்டுள்ளது. |

அடைவதற்கான வேலை திட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்கம்,மற்றும் 2000 ஆம் இன் 53 இலக்கம் இன் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23"இ" ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அனுமதிப்பத்திரங் களை பெறாமல் 24 நிறுவனங்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. | அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய பிரிவுகளுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | மிகவும் குறைந்தளவில் நடாத்தப்படும் வியாபாரங்களின் உரிமையாளர்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள ஆர்வமில்லாது இருக்கின்றனர். அத்தோடு அவ் வியாபாரங்களினால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களை குறைப்பதற்காகவும் அவர்களின் நிதி நிலைமையை கருத்திற் கொண்டும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படவில்லை. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டாம் மட்டத்தில் 09 பதவிகளில் வெற்றிடங்கள் மற்றும் அடிப்டை மட்டத்தில் 03 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவி வெற்றிடங்கள் விரைவாக நிறப்பப்பட வேண்டும். | அப் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக எம்மால் உள்ளுராட்சி ஆணையாளரிடம் பரிந்துதுரை செய்யப்பட்டுள்ளது. வெற்றிடங்களின் காரணமாக ஊழியர்கள் கடும் சிரமத்திற்காளாகியுள்ள நிலையில் மாதாந்தம் மேல் மட்டத்தில் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு வினைத்திரனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நடாத்தப்படும் 05 நீர் செயற்திட்டங்களினால் விநியோகிக்கப்படும் குடிநீரினை சுத்திகரிப்பதற்கான வழி முறை கள் பின்பற்றயிருக்கவில்லை. | சுத்திகரிக்கப்படும் நீரை பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். | இது வரையில் குளோரினை கொள்வனவு செய்து நீரை சுத்திகரிக்க நடவடிக்கைகள் தயார் செய்யபடபட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி செயலாளரின் இலக்கம் IAI/2002/02 மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கமைய கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்களிற்கான ஆவனமொன்று தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றரிக்கை அறிவுரைகளுக்கு அமைய தொடர்புடைய ஆவணங்கள் புதுப்பிக்கப்பட்டு தயார் செய்யபட வேணடும். | கணினிமயப்படுத்தப்பட்ட இன்வென்ட்ரியொன்றை தயார் செய்து புதுப்பிக்கப்பட்டு எதிர்காலத்தில் சீராக்கப்படும். |

### 3.5.2 சொத்துக்களின் மூலம் பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| டன்கன்வத்தை பாலர் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்கா ஏற்றுக்கொள்ள முடியுமான மதிப்பீடொன்றை செய்யாமல் மற்றும் ஒப்பந்தமிடப்பட்டு வரி வாடகையொன்று அறவிடாமல் மாதாந்தம் ரூபா. 500 ஆன மிகக் குறைந்த வாடகைக்கு 2018 மே மாதத்திலிருந்து தனியார் பாலர் பாடசாலை நிர்வாகியொருவரிடம் வழங்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் ஒழுங்கான முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயலற்ற சொத்தாக சபை கட்டிடம் நடாத்தப்படுவதை விட பிரதேசத்தின் சிறுவர்களின் நலன் கறுதி இந்த கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. |

### 3.5.3 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்படுத்தப்பட முடியாத தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 7 விதிக்கப்பட்ட ஒழுங்கு முறைகளை கையாளாது களஞ்சியப்படப்பட்டிருந்தது. | விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைகளை கையாண்டு அகற்றப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் விற்கப்படவில்லை என்பது தெரிவித்துக் கொள்கின்றேன் இப் பொருட்கள் 2019 ஆம் ஆண்டு ஏல விற்பனை |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்வதற்காக எதிர்பார்த்துள்ள அறிய தருகின்றேன். |
| (ஆ) | சபையிலிருந்து நீக்கப்படும் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய 8 உருக்கு எழுதும் மேசைகளும் 6 பலகை மேசைகளும் சபைச் வளவில் பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமான பொருட்கள் பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருள் ஏலத்தில் இப்பட்டிருந்த 06 உருக்கு மேசை மற்றும் பலகை மேசை பயன்படுத்தப்பட முடியுமான தரத்தில் இருந்ததால் ஏலத்தில் விற்பனை செய்யாமல் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**3.6 பெறுகைகள்**

**பெறுகைத்திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவை 4.2.1 மற்றும் 4.2.3 இற்கு அமைய பெறுகைத்திட்டம் மற்றும் பெறுகை நேர அட்வணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விவரமான பெறுகைத்திட்ட மொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விவரமான பெறுகை திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| காலாண்டிற்கு 01 தடவை கூட்ட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வாண்டிற்குள் ஒரு தடவை மாத்திரம் நடைபெற்றுள்ளது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 2 தாபிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |